திரு. ஆர். மணிமாறன் ; தாங்கள் அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பில் இடம பெறக்கூடாது என்று தீர்ப்பளித்திருக்கிறீர்கள். அதற்குப் பின்னாலும் அந்த நிகழ்ச்சியை * * * என்று தலைப்பிட்டு அலை ஓசை பத்திரிகையிலும், முரசொலி பத்திரிகையிலும், தினகரன் பத்திரிகையிலும் அந்தச் செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள்.

தாங்கள் தீர்ப்பளித்திருக்கிறீர்கள். இருந்தாலும் கூட அதை பிரசுரித்து இருப்பது அவை உரிமையை மீறிய செயலாகும். ஆகவே, இதை உரிமைக் குழுவிற்கு விட வேண்டுமென்று தங்களை தாழ்பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆ. நடராசன் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'ஜீரோ அவரில்' பாயின்ட் ஆப் ஆர்டர் முன்வரிசையில் இருக்கக்கூடிய கட்சித் தலைவர்கள்தான் கேட்கலாம் என்ற மரபை ஏற்படுத்தியிருக்கிறோம். தயவுசெய்து நீங்கள் உட்காருங்கள்.

திரு. மணிமாறன் அவர்கள் பேசும்போது * * என்று சொன்னதை நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

இங்கே எழுப்பப்பட்டிருக்கிற பிரச்சனை பத்திரிகைகளைப் பற்றியதாக இருப்பதால், சம்பந்தப்பட்ட பத்திரிகைகளிடம் விளக்கம் கேட்டு, பின்னால் என்னுடைய தீர்ப்பை அளிக்கிறேன்.

(4) ஒழுங்குப் பிரச்னை.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகளை எடுத்துக் கொள்ளாதது குறித்து:

திரு. ஜே. ஜேம்ஸ் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவரவர்களே, நான் மாண்புமிகு முதலமைச்சர் மீது கொண்டு வந்திருக்கிற உரிமைப் பிரச்சனையை தாங்கள் இன்று எடுத்துக் கொள்வதாகச் சொன்னீர்கள். ஆனால் இன்றைக்கும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. . ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய அறையிலேயே தங்களுக்கு நிலைமையை விளக்கினேன். அதை ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்பினேன். ஆனால் நீங்கள் மீண்டும் அதைப்பற்றி அவையிலே எழுப்புகிறீர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு உடல்நிலை சரியில்லை.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

* * * அதைப்பற்றி தங்களுக்குத் தெரிவித்தேன், அவர்கள் வந்த பிறகு தங்களுடைய உரிமைப் பிரச்சனையை எடுத்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : இங்கே எழுப்பப்பட்ட பிரிவிலேஜ் மோஷனில் சில வார்த்தைகளை எடுத்துவிட வேண்டுமென்று சொன்னீர்கள். அந்த வார்த்தைகளை எடுத்துவிட்டால் பிரிவிலேஜ்மோஷன் கொடுத்ததற்கான பேசிஸ் இல்லாமல் போய்விடும். ஆகவே, அது ரெக்கார்டில் இருந்தால்தான் நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது ஏற்கெனவே நீக்கப்பட்ட வார்த்தைகள். அந்த வார்த்தைகளை மீண்டும் பிரசுரிப்பது நல்லதல்ல. என்னிடத்தில் விளக்கங்கள் வந்திருக்கின்றன. என்னிடம் இருக்கின்ற குறிப்பில் எல்லா விவரமும் இருக்கிறது. அதனால்தான் ஏற்கெனவே நீக்கப்பட்ட வார்த்தைகளை மீண்டும் பத்திரிகைகளில் வெளியிட வேண்டாம் என்று உத்தரவிட்டிருக்கிறேன், *** வேண்டுமானால் 'முதலமைச்சருக்கு உடல்நிலை சரியில்லை, அதனால் அவைக்கு வரவில்லை, வந்த பிறகு எடுத்துக்கொள்கிறேன்' என்ற பகுதி மட்டும் குறிப்பில் இருக்கட்டும்; மற்றப் பகுதிகளை எல்லாம் நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். நான் கொடுத்திருந்த உரிமைப் பிரச்சனையை இன்றைக்கு எடுத்துக் கொள்வதாக தாங்கள் சொன்னீர்கள். எனக்குப் பின்னால் கொடுக்கப்பட்ட உரிமைப் பிரச்சனைகள் எல்லாம் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஒருவேளை எனக்கு உரிமைப் பிரச்சனை எழுப்ப உரிமை இல்லையோ என்று நான் கருதுகிறேன். என்ன காரணத்தால் இன்றைக்கு என்னுடைய உரிமைப் பிரச்சனை எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் அப்படிச் சொல்வது சரியல்ல. தங்களால் கொடுக்கப்பட்ட எத்தனை உரிமைப் பிரச்சனைகள், எத்தனை ஒத்திவைப்புத் தீர்மானங்கள், எத்தனை கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கின்றன. என்பதை விளக்கத்தோடு என்னால் சொல்ல முடியும். ஆகவே, உரிமை இல்லையா என்று கேட்பது சரியல்ல. அது ஆய்வில் இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.